**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 52/2017** வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பழனி | **வயது** | : | 57 |
| **த.பெ** | : | சந்திர கவுண்டர் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | கருங்காலிகுப்பம் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>05.02.2026 – வா.சா. 2 குறுக்கு விசாரணை</u>**

1)வாதி தாவாசொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் முனிரத்தினம் மகன் அண்ணாமலை, கந்தன், வள்ளி, உமாராணி, மலர்கொடி மற்றும் ஒருவர் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி நான் கூறிய நபர்கள் எங்கு உள்ளார்கள் என்றால் தெரியாது. வாதிக்கு கிரையம் கொடுத்தவர்கள் பலவருடங்களாக வெளியூரில் தான் உள்ளார்கள் என்றால் வெளியூரில் தான் உள்ளார்கள், எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. வாதிக்கு கிரையம் கொடுத்தவரக்ளுக்கு தாவாசொத்து எப்படி சொத்து பாத்திய்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. வாதிக்கு மேற்படி கிரையம் கொடுத்தவர்களுக்கும் இடையே எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் நடைபெற்றது என்று தெரியுமா என்றால் தெரியாது.

2)மேற்படி கிரையம் நடந்ததற்கு உண்டான கிரையபத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 737 ச.அடி. எதை பார்த்து **வா.சா.ஆ-1** கிரையபத்திரம் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ-1** ஆவணத்தில் என்னுடைய சாட்சி கையொப்பம் உள்ளதா என்றால் என் கையொப்பம் இல்லை. அப்படி என்றால் வேறு எதோ ஒரு பத்திரத்தில் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். வாதி கிரையம் பெறும் போது அளவீடு செய்தாரா என்றால் வாதி தாவாசொத்தில் கிரையம் பெறுவதற்கு அளவீடு செய்தார். அப்போது நான் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன். எதை வைத்து அளந்தார்கள் என்றால் வி.எ.ஓ வைத்திருந்த புலவரைபடத்தை பார்த்து அளந்தார்கள்.

3)கிரையபத்திரத்தை பார்த்து எதுவும் அளவீடு செய்யவில்லை என்றால் கிரையபத்திரத்தை எதுவும் பார்க்கவில்லை, விஎஓவின் புலவரைபடத்தை பார்த்து தான் அளவீடு செய்தார்கள், உண்மையான அளவுகள் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் இடம் தாவா சொத்திற்கு வடக்கில் பலவருடங்களாக உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி அவர் இடம் கிரையம் வாங்கி 40 வருடங்கள் இருக்கும் என்றால் எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே எனக்கு தெரியாது, தரிசாகத்தான் உள்ளது. பிரதிவாதி வெளியூர் என்றால் ஆமாம், துரிஞ்சிக்குப்பம் கிராமத்தை

சேர்ந்தவர். பிரதிவாதி வாதி பேரில் எப்போது அசல் வழக்கு எண் 25/2017 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் பிரதிவாதி தான் வாதிக்கு முன்பே மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4)மேற்படி அசல் வழக்கு எண் 25/2017 பிரதிவாதி வாதிக்கு எதிராக பிரதிவாதியின் இடத்தில் அத்துமீறி கட்டிடம் கட்டகூடாது என்று தற்காலிக தடைஉத்தரவு பெற்றுள்ளார் என்றால் சரிதான். வாதி வீடு கட்டிய பிறகு வீட்டிற்கு பின்னால் பாத்ரூம் கட்டும் போது தான் பிரதிவாதிக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்யபட்டபோது நான் அப்போது அங்கிருந்தேனா என்றால் இல்லை. ஜெயராமன் எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வெளியூரில் தங்கி உள்ளதால் வாதி அத்துமீறி அவர் இடத்தில் கட்டிடம் கட்டிவிட்டதால் நான் அவருக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.02.06 10:31:44 +0530

District Munsif,
Polur.